بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

| திக்ருகள்-பிராத்தனைகள் | சிறப்புகள் |
| --- | --- |
| அஸ்தஃக் ஃபிருல்லாஹ வ அதூபு இலைஹி<br>أَسْتَغْفِرُ اللهَ وَأَتُوبُ إِلَيهِ<br>நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி அவன் பக்கமே திரும்புகிறேன் | நபிகளார் ஒரு நாளில் எழுபது முறைக்கு மேல் கேட்ட பாவமன்னிப்பு மீட்சி<br>(புகாரி: 6307) |
| லா இலாஹ இல்லா அன்(த்)த சுப்ஹான(க்)க இன்னீ குன்(த்)து மினல் ளாலிமீன்<br>لَّا إِلَٰهَ إِلَّا أَنتَ سُبْحَانَكَ إِنِّي كُنتُ مِنَ الظَّالِمِينَ<br>உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. நீ தூயவன். நான் அநீதி இழைத்தோரில் ஆகி விட்டேன் | துன்பத்திலிருந்து விடுபட நபி யூனுஸ் (அலை) அவர்கள் கேட்ட துஆ<br>(அல்குர்ஆன் 21:87) |

| | |
|---|---|
| சுப்ஹானல்லாஹ்<br>سُبْحَانَ ٱللَّهِ<br>அல்லாஹ் தூயவன்.<br>(100 முறை) | ஆயிரம் நன்மைகள் எழுதப்படுகின்றன. அல்லது ஆயிரம் தவறுகள் அவரைவிட்டுத் துடைக்கப்படுகின்றன.<br>(முஸ்லிம் 5230) |
| அல்ஹம்துலில்லாஹ்<br>ٱلْحَمْدُ لِلَّهِ<br>எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. | (நன்மை மற்றும் தீமைகளை நிறுக்கக்கூடிய) தராசை நிரப்பக்கூடியதாகும்.<br>(முஸ்லிம் 381) |
| சுப்ஹானல்லாஹி, வல்ஹம்து லில்லாஹி<br>سُبْحَانَ ٱللَّهِ وَٱلْحَمْدُ لِلَّهِ<br>அல்லாஹ் தூயவன்; எல்லாப் புகழும் அவனுக்கே உரியது. | வானங்கள் மற்றும் பூமிக்கிடையேயுள்ள இடத்தை நிரப்பிவிடக்கூடிய அளவிற்கு அபரிமிதமான நன்மைகளைக் கொண்டதாகும்.<br>(முஸ்லிம் 381) |

| | |
|---|---|
| சுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி<br>سُبْحَانَ اللّٰهِ وَ بِحَمْدِهِ<br>அல்லாஹ் தூயவன் என்று போற்றித் துதிக்கிறேன். (100 முறை) | கடலின் நுரை அளவிற்கு (அதிகமாக) பாவங்கள் இருந்தாலும் அனைத்தும் மன்னிக்கப்படும்.<br>(புஹாரி 6405 ) |
| சுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி<br>சுப்ஹானல்லாஹில் அழீம்<br>سُبْحَانَ اللّٰهِ وَ بِحَمْدِهِ، سُبْحَانَ اللّٰهِ الْعَظِيمِ<br>கண்ணியமிக்க அல்லாஹ்வைத் துதிக்கின்றேன். அவனைப் போற்றிப் புகழ்ந்து துதிசெய்கிறேன். | நன்மை தீமை நிறுக்கப்படும் மீஜான் என்னும் தராசில் கனமானவை; அளவற்ற அருளாளனுக்குப் பிரியமானவை.<br>(புஹாரி 7563 ) |
| அல்லாஹு அக்பர் கபீரா, வல்ஹம்து லில்லாஹி கஸீரா, வ சுப்ஹானல்லாஹி புக்ரத்தவ் வ அஸீலா<br>اَللّٰهُ أَكْبَرُ كَبِيرًا وَ الْحَمْدُ لِلّٰهِ كَثِيرًا وَ سُبْحَانَ اللّٰهِ بُكْرَةً وَ أَصِيلاً | இதற்காக வானத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. |

| | |
|---|---|
| அல்லாஹ் மிகப் பெரியவன் என்று பெருமைப்படுத்துகிறேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது என்று அதிகமாகப் போற்றுகிறேன். அல்லாஹ் பரிசுத்தமானவன் என்று காலையிலும் மாலையிலும் அவனைத் துதிக்கிறேன். | **இறையருள் கிடைக்கின்றன.**<br>(முஸ்லிம் 1052 ) |
| லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு, லா ஷரீக்க லஹு, லஹுல் முல்கு, வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்<br><br>لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ<br><br>அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாருமில்லை. அவனுக்கே ஆட்சியதிகாரம் உரியது. அவனுக்கே புகழ் அனைத்தும் உரியன.<br><br>அவன் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன்.<br>(100 முறை) | 10 அடிமைகளை விடுதலை செய்ததற்குச் சமமாகும்.<br><br>மேலும், 100 நன்மைகள் எழுதப்படும். 100 தவறுகள் அழிக்கப்படும்.<br><br>அந்த நாளின் மாலை நேரம் வரும்வரை ஷைத்தானிலிருந்து (பாதுகாக்கும்) அரணாகவும் இருக்கும்.<br><br>யார் (மேற்கண்ட வாக்கியங்களை) பத்து முறை ஓதுகின்றாரோ அவர் இஸ்மாயீல் (அலை) அவர்களின் சந்ததியினரில் ஒருவரை விடுதலை செய்ததைப் போன்றவராவர் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.<br><br>(புஹாரி 3293) |

| | |
|---|---|
| **சுப்ஹானல்லாஹ், அல்ஹம்து லில்லாஹ், லாயிலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர்**<br>سُبْحَانَ اللهِ، وَالْحَمْدُ لِلَّهِ، وَلاَ إِلَهَ إِلاَّ اللهُ، وَاللهُ أَكْبَرُ<br>**இறைவன் தூயவன், அவனுக்கே எல்லாப்புகழும், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் இல்லை. அவன் மிகப்பெரியவன்** | **ஒவ்வொரு வார்த்தைக்கும் தர்மம் செய்த நன்மை கிடைக்கும்.** (முஸ்லிம் 1302)<br><br>**சூரியன் எதன் மீது உதிக்கிறதோ அ(ந்த உலகத்)தைவிட எனக்கு மிகவும் பிரியமானதாகும்.** (முஸ்லிம் 5225) |

| | |
|---|---|
| **சுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹி அதத கல்கிஹி, வ ரிளா நஃப்சிஹி, வ ஸினத்த அர்ஷிஹி, வ மிதாத கலிமாத்திஹி**<br><br>سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ عَدَدَ خَلْقِهِ، وَرِضَا نَفْسِهِ، وَزِنَةَ عَرْشِهِ وَمِدَادَ كَلِمَاتِهِ<br><br>**அல்லாஹ்வுடைய படைப்புகளின் எண்ணிக்கை அளவுக்கும், அவன் உவக்கும் அளவுக்கும், அவனது அரியணையின் எடையளவுக்கும், அவனுடைய சொற்களின் எண்ணிக்கை அளவுக்கும் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து அவனைத் தூயவன் எனத் துதிக்கிறேன்.** | **நபி (ஸல்) அவர்களின் துணைவியார்) ஜுவைரியா (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்கள் சுப்ஹுத் தொழுகைக்குப்பின் அதிகாலையில் என்னிடமிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். அப்போது நான் எனது தொழுமிடத்தில் அமர்ந்திருந்தேன். பிறகு அவர்கள் முற்பகல் தொழுகை (ளுஹா) தொழுதுவிட்டு வந்தார்கள். அப்போதும் நான் (அதே இடத்தில்) அமர்ந்திருந்தேன். அப்போது என்னிடம், "நான் உன்னிடமிருந்து சென்றது முதல் இதே நிலையில்தான் நீ இருந்துகொண்டிருக்கிறாயா?" என்று கேட்டார்கள். நான் "ஆம்" என்றேன்.**<br><br>**நபி (ஸல்) அவர்கள், "நான் உன்னிடமிருந்து சென்றதற்குப் பிறகு நான்கு (துதிச்) சொற்களை மூன்று முறை சொன்னேன். அவற்றை இன்றைக்கெல்லாம் நீ சொன்னவற்றுடன் மதிப்பிட்டால், நீ சொன்னவற்றை அவை மிகைத்துவிடும்.**<br><br>**(அவை:)- (முஸ்லிம் 5272)** |

லாஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்

لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللَّهِ

**அல்லாஹ்வின் உதவியில்லாமல் பாவத்திலிருந்து விலகவோ! நன்மை செய்ய ஆற்றல் பெறவோ முடியாது**

**உனக்கு ஒரு வார்த்தையை நான் அறிவித்துத் தரட்டுமா? அது சொர்க்கத்தின் கருவூலங்களில் ஒரு கருவூலமாகும்** என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி 4202)

**சுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வல்லாஹு அக்பர்**

سُبْحَانَ اللَّهِ، وَالْحَمْدُ لِلَّهِ، وَاللَّهُ أَكْبَرُ

(33 முறை)

சுப்ஹானல்லாஹ் 33 தடவையும், அல்ஹம்துலில்லாஹ் 33 தடவையும், அல்லாஹு அக்பர் 34 தடவையும் கூறலானோம். நான் நபி (ஸல்)

அவர்களிடம் சென்று இது பற்றிக் கேட்டேன்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், ”சுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வல்லாஹு அக்பர் என்று 33 தடவை கூறுங்கள். இதனால் ஒவ்வொரு வார்த்தையும் 33 தடவைகள் கூறியதாக அமையும்” என்று விளக்கமளித்தார்கள்

(ஹதீஸின் சுருக்கம். புகாரி 843)

| | |
|---|---|
| அல்ஹம்துலில்லாஹி ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரகன் ஃபீஹி<br><br>حَمْدًا كَثِيرًا طَيِّبًا مُبَارَكًا فِيهِ<br><br>புகழ் அனைத்தும் உனக்கே உரியது. தூய்மையும், சுபிட்சமும் மிக்க உனது திருப்புகழை நிறைவாகப் போற்றுகிறேன்.<br>தூய்மையும் வளமும் வாய்ந்த அதிகமான புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. | முப்பதுக்கும் மேற்பட்ட வானவர்கள் பதிவு செய்யும் நன்மைகள்<br>(புகாரி 799) |
| அல்லாஹும்ம அன்(த்)த ரப்பீ[B] லாயிலாஹ இல்லா அன்(த்)த கலக்(த்)தனீ வஅன அப்[B]து(க்)க வஅன அலா அஹ்தி(க்)க வவஃதி(க்)க மஸ்ததஃ(த்)து அவூது பிBக மின்ஷர்ரி மாஸனஃ(த்)து அபூ[B]வு ல(க்)க பி[B]னிஃமதி(க்)க அலய்ய வஅபூ[B]வு ல(க்)க பி[B]தன்பீ[B]ப[F]க்பி[F]ர்லீப[F]இன்ன ஹு லா யஃக்பி[F]ருத் துனூப[B] இல்லா அன்(த்)த. | பாவமன்னிப்பு கேட்பதில் தலையாய துஆ |

اللَّهُمَّ أَنْتَ رَبِّي لاَ إِلَهَ إِلاَّ أَنْتَ، خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ، وَأَنَا عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ، أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ، وَأَبُوءُ لَكَ بِذَنْبِي، فَاغْفِرْ لِي، فَإِنَّهُ لاَ يَغْفِرُ الذُّنُوبَ إِلاَّ أَنْتَ

**இறைவா! நியே என் எஜமான்!**

**உன்னை தவிற வணக்கத்திற்குறியவன் யாரும் இல்லை.**

**நான் உனது அடிமை. உனது உடன்படிக்கையின் படியும், வாக்குறுதியின்படியும் என்னால் இயன்ற வரை நடப்பேன்.**

**நான் செய்த தீமையை விட்டு உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன்.**

**நீ எனக்கு செய்த அருளோடும். நான் செய்த பாவத்தோடும் உன்னிடம் மீள்கிறேன்.**

**எனவே என்னை மன்னிப்பாயாக! உன்னை தவிற யாரும் பாவங்களை மன்னிக்கமுடியாது.**

**இந்த துஆவை ஒருவன் பகலில் ஓதிவிட்டு அன்றே மரணித்தால் அவன் சொர்க்கவாசியாவான். இரவில் ஓதி விட்டு இரவிலேயே மரணித்து விட்டால் அவனும் சொர்க்கவாசியாவான்.**

**(புகாரி 6309,6323)**